THE HON. SRI M. A. MANICKAVELU : The Corporation of Madras has prepared and sumbitted a Preliminary General Development Plan for the City of Madras which is under scrutiny of the Director of Town-Planning. The other municipalities have not yet finalised the General Town-Planning Scheme.

SRI N. K. PALANISAMI : இந்த ராஜ்யத்தில் 20 லட்சம் பேர்கள் இருக்கக்கூடிய சேரிகளையெல்லாம் ஒரு பக்கத்தில் அமைக்க ஒரு திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். இருபது லட்சத்துக்குமேல் பாக்கி இருக்கக் கூடிய ஜனங்களை எந்த வகையில் குடி அமைக்கப் போகிறார்கள் என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதை கொஞ்சம் கொஞ்சமாகத்தான் செய்யவேண்டும். ஒரேயடியாக எல்லாப் பகுதி களிலும் செய்ய முடியாது. இப்போது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத் திலே 78·11 லட்சம் இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சென்னையில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மற்ற முனிஸிபாலிடிகளில் இன்னும் தயாரிக்கப்படவில்லை.

9–50 a.m. SRI N. K. PALANISAMI : சர்க்காருக்கு திட்டம் சமர்ப்பிப்பதில் தாமதம் ஏற்படக் காரணம் என்ன என்பதை கனம் அமைச்சர் சொல்லு வார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: பணம் இல்லாததினாலும், அதற்கு வேண்டிய டெக்னிகல் எக்ஸ்பெர்ட்டுகள் இல்லாததினாலும்தான்.

Tondi Port

*885 Q.—SRI S. RAMAKRISHNA THEVAR: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் ஜில்லாவில் திருவாடானைத் தாலூக்காவில் உள்ள தொண்டித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) அப்படியானால், எப்பொழுது ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI S. RAMAKRISHNA THEVAR : இந்தத் தொண்டித் துறைமுகம் பல ஆயிரக் கணக்கான வருஷங்களுக்கு முன்பாகவே மிகவும் சரித்திரப் பிரசித்திபெற்ற ஒரு துறைமுகமாக இருந்திருக்கிறது. இந்த துறைமுகத்தைப்பற்றி சிலப்பதிகாரம் போன்ற நூல்களிலே . . .

MR. SPEAKER : கனம் அங்கத்தினர் கேள்வி போடவேண்டும். பழைய சரித்திரத்தை எல்லாம் ஏன் இப்பொழுது சொல்லவேண்டும் ? (சிரிப்பு.)

SRI S RAMAKRISHNA THEVAR : 45 வருடங்களுக்கு முன்பாக இந்தத் துறைமுகத்திற்கும் இலங்கைக்கும் . . .

MR. SPEAKER : நான் சொன்னதை கனம் அங்கத்தினர் கேட்க வில்லை. அங்கத்தினர் என்ன கேள்வி கேட்கவேண்டுமென்று நினைக் கிறாரோ அதைக் கேட்கலாம். நாற்பது, ஐம்பது வருஷங்களுக்கு முன்பு இருந்ததை யெல்லாம் இப்பொழுது சொல்லவேண்டாம். (மேலும் சிரிப்பு.)

SRI S. RAMAKRISHNA THEVAR : இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். ஏன் அந்தமாதிரி செய்யக்கூடாது என்று தான் கேட்க விரும்புகிறேன். சுமார் 45 வருஷங்களுக்கு முன்பு இந்தத் துறைமுகத்திற்கும் இலங்கைக்கும் . . .

5th November 1958]

MR. SPEAKER : தயவுசெய்து அங்கத்தினர், "இது ஒரு பிற்பட்ட துறைமுகம், இதைச் சீர்திருத்த முடியுமா" என்று கேள்வி கேட்டால் போதும். பழைய சரித்திரத்தை எல்லாம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர், இந்தத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதற்கு இப்பொழுது திட்டம் இருக்கிறதா என்று கேட்டதனால், இல்லை என்று பதில் சொன்னேன். "லாண்டிங் அண்டு ஷிப்பிங் கமிட்டி" என்று ஒன்று வைத்து, அங்கு ஏதாவது வசூல் செய்து இதை அபிவிருத்தி செய்ய முடியுமா என்று அரசாங்கம் யோசனை செய்து வருகிறது.

Cultivation of Tea and Coffee in the Javadu and Elagiri Hills

* 886 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா :—

ஜவ்வாது மலை—எலகிரி மலையில் தேயிலை—காப்பி பயிர் செய்ய முடியுமா என்று சர்க்கார் ஆராய்ச்சி செய்து பார்த்தார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No serious attempts have so far been made by the Forest Department to grow coffee in the Javadu and Elagiri Hills departmentally. The elevation and rainfall are not adequate for growing tea in these places.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் அமைச்சர் அவர்கள் நான்கு மாதங்களுக்கு முன்பு இந்த சரித்திரப் பிரசித்திபெற்ற மலைகளுக்குச் சென்று பார்வையிட்டபொழுது, அங்கேயுள்ள போக்குவரத்து வசதிகளைச் செப்பனிடுவதன் மூலமாக காப்பி, தேயிலை போன்றவைகளைப் பயிரிட்டு பலவகை அபிவிருத்திகளைச் செய்ய முடியுமென்று அபிப்பிராயப் பட்டார்கள். அதற்கான நடவடிக்கைகள் விரைவிலே எடுக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : நான் அங்கே போனபொழுது, காப்பி, தேயிலை பயிர் செய்வதுபற்றி யாரிடமும் கலந்து பேசவில்லை. அதைப்பற்றி அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை. ஆனால் தேயிலை பயிரிடுவதற்கு அதிக மழை வேண்டும், அதிக உயரம் வேண்டும். இந்த இரண்டு வசதியும் இந்த மலைகளிலே இல்லை.

Stud Bulls

* 887 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) Whether stud bulls (supplied by the Government to the Co-operative Farms and individuals), which are born out of artificial insemination, are giving satisfactory services; and

(*b*) if not, whether artificial insemination is proposed to be given up?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Animal Husbandry Department has not supplied so far any co-operative farm with bulls born by Artificial Insemination. From experience it has been found that bulls born by artificial insemination serve as well as those born by natural service.

(*b*) Does not arise.

SRI A. A. RASHEED : Sir, may I know whether the Government have received any complaints regarding the unsatisfactory service done by stud bulls born of artificial insemination?